**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 422/2024**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 04.02.2026.**

| | |
|---|---|
| **Name : கௌரிசங்கர்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் அரியாம்பட்டியில் குடியிருந்து பார்மஸி வைத்து நடத்தி வருகிறேன். அ.சா1 யை எனக்கு தெரியும். எதிரியை எனக்கு தெரியும். எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாக அ.சா.1 யை ஆஜர் எதிரி அவர்கள் வீட்டு முன்பாக மமுட்டியால் இரு கால்களிலும் அடித்து காயம் ஏற்படுத்தினார். என் மாமா பழனிகவுண்டர் என்பவரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்று சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். சம்பவத்தின் போது நான் என் மாமா வீட்டிற்கு பக்கத்தில் இருந்த போது சம்பவம் நடந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். அ.சா.1 சொல்லி தான் சம்பவம் பற்றி தெரியும். காவல் நிலையம் சென்றிருந்த போது என்னை விசாரித்தார்கள். நான் அ.சா.3 மற்றும் அசா.1 ஆகியோர் இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளிக்க சொன்னதால் நான் புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் சென்றோம். புகாரை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால்

அ.சா.1 சொல்ல சொல்ல போலீசார் எழுதிக் கொண்டார்கள். யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் நான், அ.சா.1, அ.சா.3 ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதன் பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 க்கு காலில் ரத்த காயம் ஏற்பட்டிருந்ததா என்றால் ஒரு காலில் சிறிதளவு ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஆனால் எந்த கால் என்று தற்போது நினைவில்லை. சம்பவயிடம் சென்ற போது அங்கு யார் யார் இருந்தனர் என்றால் ஆஜர் எதிரி அ.சா.3 மற்றும் அ.சா.1 ஆகியோர் இருந்தார்கள். அவர்களுக்குள் என்ன தகராறு என்று தெரிந்து கொண்டேனா என்றால் காட்டு தகராறு என்று தெரிந்து கொண்டேன்.

3) ஆஜர் எதிரி என் தந்தை, அக்கா கணவர் ஆவார். நான் கேள்விப்பட்டது போல் கேள்விப்பட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் புகார்தாரருக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக ஆஜர் எதிரி மீது புகார்தாரர் தவறான புகாரை அளித்துள்ளார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.